# <u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>

## <u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2018–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28–ம் தேதி புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் அவசரக் கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.மகாராஜன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.

**<u>மன்றபொருள்.1.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2018–21 ஆம் ஆண்டுக்கு கீழ் குறிப்பிட்டுள்ள குத்தகை உரிமங்களை அனுபவிக்கும் உரிமைக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறையின் 19.09.2008ம் தேதிய அரசாணை(நிலை) எண்.181ல் குறிப்பிட்டுள்ள அறிவுரையின்படி, பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் மற்றும் 2018–21க்கான திருத்தப்பட்ட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விளம்பர நிபந்தனைகள் மற்றும் சிறப்பு கட்டுபாடுகள், தனி கட்டுபாடுகள் அடங்கிய அறிவிப்பு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | குத்தகை உரிமம் இனங்களின் விபரம் | ஏல வைப்புத் தொகை ரூ | தாக்கல் செய்ய வேண்டிய சொத்து மதிப்புக்கான செல்வ சான்றிதழ் 01.01.2018–க்கு பிறகு பெற்றதாக இருக்க வேண்டும் ரூ | சொத்து மதிப்பு செல்வ சான்றிதழ் தர இயலாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | பி.ஏ.எச்.சாலையில் உள்ள நகராட்சி தினசரி சந்தை மற்றும் ஏல அறிக்கையில் கண்டுள்ள தெருக்களில் சாலை ஓர கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் வண்டிப்பேட்டையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 50,000/– | 2,00,000/– | 75,000/– |
| 2 | நகராட்சி புதிய கட்டிடம் ஆடு அறுக்கும் தொட்டி மற்றும் மற்றும் நகர எல்லைக்குள் மாடு அறுக்கும் இடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் ஜம்புலிங்க பூங்காவில் விழும் சாணம் எடுத்துக் கொள்ளும் உரிமம் | 20,000/– | 1,00,000/– | 40,000/– |
| 3 | பேருந்து நிலையத்தினுள் வரும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,00,000/– | 5,00,000/– | 1,00,000/– |

| | | | | |
|---|---|---|---|---|
| **4** | பேருந்து நிலையத்தினுள் உள்ள சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 15,000/– | 50,000/– | 30,000/– |
| **5** | பேருந்து நிலையத்தினுள் உள்ள கட்டண கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 15,000/– | 50,000/– | 30,000/– |
| **6** | முள்ளிகிராம்பட்டு தென்பெண்ணை ஆற்று திருவிழா ஒரு நாள் மட்டில் சுங்கவரி கட்டணம் வசூலிக்கும் உரிமம் | (இவ்வினத்திற்கு மட்டில் பொங்கல் பண்டிகை முன்பு ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி நடைபெற தனியே ஏல அறிவிப்பு வெளியிடப்படும்) | | |

அலுவலக குறிப்பு:- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. 2018–21ம் ஆண்டிற்கான மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு பொது ஏலம் விடவும் , ஒப்பந்தபுள்ளி கோரவும் , ஏல அறிவிப்புகளை அச்சடிக்கவும் மற்றும் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்காகும் செலவின இனத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2023/2016/இ1

**மன்றபொருள்.2.** நெல்லிக்குப்பம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் (திடக்கழிவு மேலாண்மை திட்டம்) 2016-17ன் கீழ் தீர்மான எண். 49 நாள். 30.03.2017 படி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி செயல்முறை உத்திரவு ந.க.எண். 30362/2016/P3 நாள்.16.02.2017 மற்றும் திருத்திய நிர்வாக அனுமதி செயல் முறை ந.க..எண். 11088–3 /2017/ P 3 நாள். 24.05.2017ன் படியும், மதிப்பீட்டு ரூ. 90.25 லட்சத்திற்கும் மற்றும் ரூ. 46.00 லட்சத்திற்கும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 23.08.2017 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நகர மன்ற தீர்மான எண். 180, 181 நாள் . 09.10.2017 ஒப்பந்தபுள்ளிக்கான அனுமதி பெறப்பட்டு 19.10.2017 அன்று முறையே பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மண்டல செயற் பொறியாளர் ஆய்வில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரையின் படி இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு பதிலாக திருச்சிராப்பள்ளி வேலூர் மாநகராட்சிகளில் வெற்றிகரமாக செயல்படுத்தி வரும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழான Micro Composting Centre அமைத்து மக்கும் குப்பைகளை அரைத்து உரம் தயார் செய்யவும் மக்காத குப்பைகள் , எதற்கும் பயன்படாத குப்பைகளை கழிவு அகற்றம் செய்யவும் வேண்டிய பணிகளை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கும், பணியை மேற்கொள்வதற்கும் கீழ் கண்ட விவரப்படி திருத்திய நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பிரேரனை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் வரிசை எண்2. 2 மற்றும் 3க்கு திருத்திய மதிப்பீட்டிற்கும் பணியை அதே ஒப்பந்ததாரரைக் கொண்டும் அவர் வழங்கியுள்ள ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்தில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | முதல் நிலை சேகரிப்பு பணிக்கு 85 எண்ணிக்கை தள்ளு வண்டி வாங்கும் பணி | 17.00 | பணி முடிக்கப்பட்டது |
| 2 | மேல்பாதி உரக்கிடகில் Micro Composting Centre அமைக்கும் பணி | 46.00 | |

| | | | |
|---|---|---|---|
| 3 | ஆரோக்கியசாமி தெரு உரக்கிடங்கில் Micro Composting Centre அமைக்கும் பணி மற்றும் மேல்பாதி உரக்கிடங்கில் சுற்று சுவர் , தண்ணீர் வசதி ஏற்படுத்தும் பணி | 90.25 | சுற்றுசுவர் அமைகும் பணி நடைபெற்று வருகிறது |
| 4 | தகவல் தொழில் நுட்பம் , கல்வி மற்றும் விளப்பர பிரிவு | 4.75 | பணி நடைபெற்று வருகிறது |

அலுவலக குறிப்பு;– மன்றம் அனுமதிக்கலாம்.
<u>ந.க.எண் .2023/2016/இ1</u>

**<u>மன்றபொருள்.3.</u>** இந்நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் / பணியாளர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கிட ஆகும் தோராய செலவினம் ரூ. 12000/– யை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- அனுமதிக்கலாம்
<u>ந.க.எண் சி1/519/2017</u>

**<u>மன்றபொருள்.4.</u>** இந்நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் / பணியாளர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை தயார் செய்து வழங்க 12.02.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஒரு அட்டைக்கான தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ ஆசை ஸ்டுடியோ & வீடியோ<br>நெ. 264/549 KSAR Main Road<br>கீழ் பட்டாம் பாக்கம் நெல்லிக்குப்பம் 607 105 | ரூ. 90/– |
| 2 | ஸ்ரீசிவசக்தி ஸ்டுடியோ & வீடியோ<br>30/1 , karnathem road, Near Sivan kovil<br>மங்கலம் பேட்டை 607 104 | ரூ.110/– |
| 3 | பிரபு போட்டோ ஸ்டுடியோ & டிஜிட்டல் வீடியோ<br>நெ. 481 காந்தி ரோடு<br>பண்ருட்டி 607 106 | ரூ. 130/– |

அலுவலகக்குறிப்பு:- 1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள ஸ்ரீ ஆசை ஸ்டுடியோ & வீடியோ நெல்லிக்குப்பம் அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியத்தை முன்னிட்டு முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கிகரிக்கலாம்.

**<u>மன்றபொருள்.5.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி அம்மா உணவகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் மூன்று அடுப்பு (எரிவாயு அடுப்பு) சரிவர எரியாததால் அடுப்பினை சரி செய்து எரிய வைக்க பர்னர் – 3, ரெகுலேட்டர் – 1, யுனிட் வால்வு– 1. ஜெட் – 3, சர்வீஸ் சார்ஜ் ரூ 300/– ஆக மொத்தம் ரூ 2070/–ஐ நகராட்சி சட்டப்பிரிவு 15– ன் கீழ் செலவினம் மேற்கொண்டதற்கு மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு:– நெல்லிக்குப்பம் நகராட்சி அம்மா உணவகம் , தினசரி செயல்பட வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி த.நா.ந.ச.பிரிவு 15–ன் கீழ் செலவீனம் மேற்கொண்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

**மன்றபொருள்.6.** நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் ஏற்கனவே உள்ள வார்டுகளில் மக்கள் தொகை அதிகமாக இருக்கும், சில பகுதிகளில் குறைவாக இருக்கும் மாநில தேர்தல் ஆணையம் ஒரே சீராக வரும் நோக்கத்தோடு நெல்லிக்குப்பம் நகராட்சியில் 30 வார்டுகள் பிரிக்கப்பட்டது. இவை தொடர்பாக அரசால் வார்டிற்கு வரைவு ஒப்புதல் 27.12.2017 ல் அளித்துள்ளது. மேலும் பொது மக்களின் கருத்துகளின் பேரில் திருத்திய வார்டு வரையறையும் செய்யப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி செய்வதற்கு கீழ்காணும் வகையில் கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. ஒட்டு மொத்த வார்டு வரைபடம் , தனித்தனி வார்டு வரைபடம் , Book Binding, Spirul Binding, Xerox, போன்றவை அடிக்கடி தயார் செய்யப்பட்டு அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இப்பணி செய்ய தோராய செலவினம் ரூ.50,000/– மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலலக் குறிப்பு**

அரசால் தெரிவித்துள்ள வார்டு வரையறைப்பணி துவங்கி வரைவு ஒப்புதல் பெற்று இறுதி ஒப்புதலுக்கு அனுமதி பெரும் நிலையில் உள்ளது. இப்பணி செய்வதற்கு தேவையான வரைபடம் , தனித்தனி வார்டு வரைபடம், Xerox, A3 Size, Legal Size, Book binding செய்வதற்கு அவசர அவசியம் முன்னிட்டு தோராய செலவீனம் ரூ 50,000/– அனுமதிக்கலாம்.

**ந.க.எண்3192/2017/F1**

**மன்றபொருள்.7.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதார பிரிவு துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள் பிரிவில் பணிபுரியம் கீழ்நிலை பணியாளர்களுக்கு 2017 – 18 ம் ஆண்டிற்கான காலணிகள் மற்றும் ஓட்டுநர்களுக்கு ஷீ (SHOES) சப்பாத்து வழங்க வேண்டியுள்ளதால் அதற்கான தோராய செலவினம் ரூ.1,50,000/– ஆகும் இத்தொகையினை வருவாய் நிதியில் செலவு மேற்கொள்ளவும் அரசு நிறுவனமான காதி & கதர்கிராமத் தொழிற் துறையில் கொள்முதல் செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்ற முன் அனுமதி வழங்கியுள்ளதை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 474/2018/எச்1

**மன்றபொருள்.8.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் பொது நிதியில் அவசரம் அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சிக்கு சொந்தமான TN / AF – 1415 மினி லாரி வாகனத்திற்கு நாசில் பம்பு பகுதியில் பழுதடைந்துவிட்டதால், அதனை சீர் செய்த வகையில் ரூ. 18,100/– தொகையின் பிரிவு 15 ன் கீழ் சரிசெய்யப்பட்டது. சரி செய்யப்பட்ட பட்டியல் தொகையினை ஜோதி டீசல் பம்பு இன்ஜினியரிங் அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்

ந.க.எண் 4135/2017/எச்1

**மன்றபொருள்.9.** இந்நகராட்சியின் நிதியாண்டு 2016 – 17ம் ஆண்டுகளின் தணிக்கை அறிக்கை மற்றும் அதன் தொடர்பான துணைப் பதிவேடுகள் (சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், குத்தகை இனங்கள்) ஆகியவைகள் கணினியில் பதிவேற்றம் செய்து அதனை பிரிண்ட் எடுத்து Spiral Binding செய்வதற்கும், 2016 – 17ம் ஆண்டு தணிக்கை அறிக்கை, General Ledger பொது நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி ஆகிய இனங்கள் கணினியில் தட்டச்சு செய்து பிரிண்ட் எடுத்து 5 நகல்கள் எடுத்து பைண்டிங் செய்வதற்கும் , உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை கடலூர், இணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை மறைமலை நகர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு , நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை ஆகியோர்களுக்கு அனுப்பப்படவேண்டியுள்ளதால், தட்டச்சு செய்து பிரிண்ட் எடுத்து பைண்டிங் செய்வதற்காகும் தோராய செலவினம் ரூ.20,000/–யை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.2785/2011/H1

**<u>மன்றபொருள்.10.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN-31/ B 0834 வண்டிக்கு 10.12.2017 அன்று பஞ்சர் ஒட்டப்பட்டு பிட்டிங் செய்து மாற்றப்பட்டு நான்கு வீல்களுக்கு காற்று பிடிக்கப்பட்ட செலவு ரூ.350/— மற்றும் 20.10.2017 அன்று பஞ்சர் ஒட்டப்பட்டு பிட்டிங் செய்து மாற்றப்பட்டு ரூ 250/— மற்றும் 04.12.2017 அன்று ஜட்டாலிக் பழுது அடைந்ததால் சரி செய்யப்பட்டது ரூ 650/— மற்றும் 14.11.2017 அன்று பிரேக்மாஸ் அசம்பளி மற்றும் ஸ்டார் பேல்ட் மாற்றப்பட்டது ரூ 1000/— அன்று கிளாட்சி குமல் சிலிண்டர் அசம்பளி டீசல் பம்பு நாசில் சரி செய்த மாற்றப்பட்டதற்கான தொகை ரூ 2510/— செலவு செய்யப்பட்டது, மேற்கண்ட தொகை மொத்தம் ரூ 4710/— ஐ ஒட்டுனர் திரு.கே. ராஜராஜசோழன் அவர்களால் செலவினம் மேற்கொள்ளப்பட்டதால், செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படடுகிறது.

அலுவலக குறிப்பு :— அனுமதிக்கலாம்.

ந.க.எண் 4125/2017/எச்1

**<u>மன்றபொருள்.11.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்புகளுக்கு அன்றாடம் வழங்கப்படும் குடிநீரின் அளவு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வாயிலாக மத்திய அரசுக்கு நீர் மேல்வரி (Water Cess Assessment ) செலுத்தப்பட வேண்டும். அதன்படி ஏப்ரல் 2014 முதல் மே 2017 வரையில் செலுத்த வேண்டிய நீர் மேல்வரி ரூ.2,36,667/- செலுத்த தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம் அவர்களின் கடிதம் எண். 0070/உ.நீ/நீர்மேல்வரி/மாசுகுபொ/2018நாள்.24.01.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :— மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 284/2018/இ1)

**<u>மன்றபொருள்.12</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக முதன்மை பொறியாளர் , சென்னை அவர்களின் செயல்மறை உத்தரவு ந.க.எண்.13899/2016/D01 நாள் 27/01/2017 ன் படி, மூன்று ஆண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்ய தெரிவித்ததின் அடிப்படையில் 14.02.2017 அன்று ஒப்பந்த புள்ளியின் அடிப்படையில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள M/S மல்லிகா எலக்ட்ரிக்ஸ் & எலட்ரானிக்ஸ் , பண்ருட்டி அவர்களுக்கு நகரமன்ற தீர்மான எண் 46 நாள் 17.3.2017 அனுமதியின் படி 21.02.2017 முதல் 20.02.2018 வரை ஒரு ஆண்டுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டது. பணிகாலம் முடிவடைந்ததை தொடர்ந்து மேலும் ஒரு ஆண்டுகாலத்திற்கு நீட்டிப்பு செய்ய M/S ஸ்ரீ மல்லிகா எலக்ட்ரிக்ஸ் அவர்களின் கடிதம் சமர்ப்பித்துள்ளார். எனவே, அவர்கள் சமர்ப்பித்தள்ள ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்தில் இரண்டாம் ஆண்டுக்கு 21.02.2018 முதல் 20.02.2019 வரை பணியை மேற்கொள்ளவும் , இதற்கு ஆகும் செலவினம் ரூ. 23.57 லட்சத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1. அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசரம் அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு பின்னேற்பு பெற கடிதம் அனுப்பியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 2606/2017/இ1)

**<u>மன்றபொருள்.13.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் அம்பேத்கார் நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி Delivery Value பழுது ஏற்பட்டு தண்ணீர் திறக்க இயலவில்லை . எனவே புதியதாக 100 mm C.I Sluice Value புதியதாக வாங்கி பொருத்தியதற்கு ரூ. 5959/— யை அவசரம் அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து M/s . Sri Devi Industries , சென்னை அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** பதிவு செய்யலாம்

ந.க.எண் 236/2018/இ1

**<u>மன்றபொருள்.14.</u>**நெல்லிக்குப்பம் நகராட்சியில் சோழவல்லி நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி Delivery Value பழுது ஏற்பட்டு தண்ணீர் திறக்க இயலவில்லை . எனவே புதியதாக 80 mm C.I Sluice Value புதியதாக வாங்கி பொருத்தியதற்கு ரூ. 4661/– யை அவசரம் அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து M/s . Sri Devi Industries , சென்னை அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** பதிவு செய்யலாம்

ந.க.எண் 237/2018/இ1

**<u>மன்றபொருள்.15.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி மருத்துவமனையில் உள்ள 250 LPH RO System Membrane பழுது ஏற்பட்டு இயங்கவில்லை. இதனை புதியதாக மாற்றி பொருத்தியதற்கும் மற்றும் சர்விஸ் செய்ததற்கும் ரூ. 27000/– யை அவசரம் அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து திருமதி. எஸ். புவனேஸ்வரி, நெல்லிக்குப்பம் அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** பதிவு செய்யலாம்

ந.க.எண் . 346/2018/இ1

**<u>மன்றபொருள்.16.</u>** இந்நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்த திரு . என்.முருகையன் 17.09.2017 அன்று பணியிடையின் போது இறந்துவிட்ட காரணத்தால், அவரது மனைவியும் வாரிசு தாரருமான திருமதி. மீரா க/பெ. முருகையன் என்பவர் எனது கணவரின் ஊதியத்தில் பிடித்தம் செய்த சிறப்பு சேமநல நிதி (SPF) கணக்கினை முடித்து அதற்கான தொகையினை வழங்குமாறு கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம் உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி திரு . என்.முருகைன் (லேட்) துப்புரவு பணியாளர் கணக்கில் உள்ள தொகையினை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்த நாள் | 03/7/2000 |
| 2 | ஓய்வுபெறும் நாள் | – |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 114 தவணைகள் |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | 08/2017 |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.2280/– |
| 6 | 01.08.2000 முதல் 01.08.2017 முடிய கணக்கிடப்பட்ட வட்டித்தொகை | ரூ.1480/– |
| | மொத்தம் | ரூ.3760/– |

எனவே மேற்கண்டுள்ள விபரப்படி திரு . திரு . என்.முருகைன் துப்புரவு பணியாளர் உதவியாளர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை **ரூ.2280/–**ம், அதற்குண்டான வட்டித்தொகை **ரூ.1480/–**ம் சேர்த்து மொத்தம் ரூ. 3760/–வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**<u>ந.க.எண்.3744/2017/பி2</u>**

**<u>மன்றபொருள்.17.</u>**இந்நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்த திரு. சாகுல் அமீது 13.11.2015 அன்று பணியிடையின் போது இறந்துவிட்ட காரணத்தால், அவரது மனைவியும் வாரிசுதாரருமான திருமதி. ஜெஹபர் நாச்சியாரா க/பெ. சாகுல் அமீது என்பவர் எனது கனவரின் ஊதியத்தில் பிடித்தம் செய்த சிறப்பு சேமநல நிதி (SPF) கணக்கிணை முடித்து அதற்கான தொகையினை வழங்குமாறு கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம் உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி திரு. என்.முருகைன் (லேட்) துப்புரவு பணியாளர் கணக்கில் உள்ள தொகையினை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்த நாள் | .8.2011 |
| 2 | ஓய்வுபெறும் நாள் | – |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 32 தவணைகள் |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | 08/2017 |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.640/– |
| 6 | 01.08.2011 முதல் 01.10.2015 முடிய கணக்கிடப்பட்ட வட்டித்தொகை | ரூ.194/– |
| | மொத்தம் | ரூ.834/– |

எனவே மேற்கண்டுள்ள விபரப்படி திரு. சாகுல் அமீது துப்புரவு பணியாளர் உதவியாளர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை **ரூ.640/–**ம், அதற்குண்டான வட்டித்தொகை **ரூ.194/–**ம் சேர்த்து மொத்தம் ரூ. 834/–வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**<u>ந.க.எண்.2783/2017/பி2</u>**
**<u>மன்றபொருள்.18.</u>**நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு மனித சக்தி வழங்குதல் சம்மந்தமான பணி குறித்து சென்னை உயர்நீதி மன்றத்தில் செயலாளர், Nellikuppam Agro Enggineering Service Co–Operative Ltd, E 2739, கம்பர் நகர், வாழப்பட்டு, நெல்லிக்குப்பம், கடலூர் மாவட்டம் அவர்கள் வழக்கு தொடர்ந்துள்ளார். மேன்மை மிகு சென்னை உயர்நீதி மன்ற வழக்கு W.P NO. 3229/2018, W.M.P NO. 3962/2018 வழக்கிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்கள் சார்பாக ஆஜராவதற்கு சென்னை உயர்நீதி மன்ற அரசு வழக்கறிஞர் (Govt Pleader) திரு .சூரிய நாராயணன் அவர்களுக்கு ரூ. 5000/– வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
**<u>அலுவலக குறிப்பு: 1.</u>** பதிவு செய்யலாம்
2. அவசரம் அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
ந.க.எண். 3705/2017/இ1
அங்கீகரிக்கலாம்.

**<u>மன்றபொருள்.19.</u>**நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான பி.ஏ.எச் சாலையில் உள்ள தினசரி மார்க்கெட்டில் புதியதாக கட்டுப்பட்டுள்ள ஆட்டு இறைச்சி கடை எண்.13,14,15 மற்றும் 16 ஆகிய நான்கு கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 30.01.2018 அன்று கோரப்பட்டதில், கடை எண்.16க்கு மட்டும் கீழ்கண்ட நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக் கேள்வி எழுப்பியதை மன்றத்தின் பார்வைக்கு முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பொது ஏலம் கோரியவரின் பெயர் மற்றும் முகவரி | உயர்த்தப்பட்ட மறு ஏல பொது ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1 | திரு.A.R.ஹசன் அலி த/பெ அப்துல் ரஹ்மான்<br>24/29, முஸ்லீம் ஒற்றவாடை தெரு,<br>நெல்லிக்குப்பம். | ரூ.970/— |
| 2 | திரு.M.முஹம்மது அன்சாரி த/பெ<br>முஹம்மது மொய்தீன்,<br>29/24, முஸ்லீம் ஒற்றவாடை தெரு,<br>நெல்லிக்குப்பம். | ரூ.1000/— |

அலுவலக குறிப்பு : வரிசை எண்.2ல் குறிப்பிட்டுள்ள ஏலதாரர் கடை எண். 16க்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்ட தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.468/2006/அ1

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.